MCYS 132-07-25 V3

17 மார்ச் 2006

# குழந்தை நல விடுதிகளில் குழந்தைகளை விடும் பெற்றோர் அனைவர்க்கும்

# குழந்தை நல விடுதியில் கை, கால், வாய் நோய்த் தடுப்பு நிர்வகிப்பு

கை, கால், வாய் நோய் (HMFD), சிங்கப்பூரில் பத்து வயதிற்குக் குறைவாக உள்ள குழ்ந்தைகளுக்கு இயல்பாக வரும் குழந்தை நோயாகும். இவ்வாண்டுத் தொடக்கத்திலிருந்து இந்த நோய் கண்டோரின் எண்ணிக்கை கூடியிருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

2. குழந்தை நல விடுதிகளில் உங்கள் குழந்தைகளுக்குப் பாதுகாப்பான, சுகாதாரமான சூழ்நிலையை ஏற்படுத்தும் முயற்சிகளுள் ஒன்றாக, சமூக வளர்ச்சி, இளையோர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சும் சுகாதார அமைச்சும், நம் குழந்தை நல விடுதிகளில் அனுசரிக்கப் படவேண்டிய நல்ல பழக்கங்களைப் பரிந்துரைத்துள்ளது. கீழ்க் காணும் அனைத்தும் விடுதிகளில் அனுசரிக்கப்பட வேண்டுமென அவற்றுக்கு நினைவூட்டப்பட்டுள்ளது.

- குழந்தைகள் வந்தவுடன் அவர்களைப் பார்த்து நோய்ச் சோதனை செய்ய வேண்டும். தினசரி அவர்களுடைய உடல் வெப்பம் சோதிக்கப் படவேண்டும்.
- நோய்வாய்ப்பட்ட குழந்தைகள் விடுதிக்குத் திரும்புவதற்கேற்ற உடல் நலத்தில் உள்ளனர் என மருத்துவர் ஒருவர் சான்றிதழ் அளித்தால் தவிர அக்குழந்தைகள் விடுதிக்குத் திரும்ப அனுமதிக்கக் கூடாது.
- புதிய, பழைய ஊழியர்கள் அனைவரும் உடல் நலத்துடனும் சுத்தம் தரும் பழக்க வழக்கங்களுடனும் இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உணரச் செய்ய வேண்டும். இதில், ஊழியர்களும் குழந்தைகளும் சரியான முறையில் கை கழுவும் முறையும் அடங்கும்.
- கை, கால், வாய் நோயின் நிலைமை குறித்து, குறிப்பாக விடுதியில் அந்நோய் முன்பு யாருக்கேனும் கண்டிருந்தாலோ, கொஞ்ச காலத்திற்குப் பிறகு மீண்டும் தோன்றியிருந்தாலோ, அதனை பெற்றோர் அனைவரிடமும் தெரியப்படுத்த வேண்டும். இது, தங்கள் குழந்தைகளிடம் நோய் தோன்றுவதை உடனடியாகக் கவனிக்க பெற்றோர் விழிப்புடன் இருப்பதற்குத் துணை புரியம்.
- கை, கால், வாய் நோய் கண்டவர்கள் விடுதிகளில் இருந்தால், அது குறித்து குழந்தை நல விடுதிகள், சமூக வளர்ச்சி, இளையோர் மறறும் விளையாட்டுத் துறை அமைச்சுக்கும் சுகாதார அமைச்சுக்கும் தெரியப்படுத்த வேண்டும்.

பரிந்துரைக்கப்பட்ட நல்ல பழக்கங்களை அனுசரிக்க வேண்டுமென குழந்தை கவனிப்பு விடுதிகளுக்கு நினைவூட்டுவது தவிர, விடுதிகளில் அந்நோய் கண்டுபிடிக்கப் பட்ட பிறகு, அது தொடர்ந்து அவ்விடத்தில் தலை தூக்காமலிருப்பதை உறுதி செய்ய, சமூக வளர்ச்சி, இளையோர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் அதிகாரிகள் சுகாதார மற்றும் சுத்தம் சம்பந்தப்பட்ட சோதனைகளையும் மேற்கொள்கிறார்கள்.

3. பெற்றோர் அனைவரும் தொடர்ந்து மிக விழிப்பாக இருந்து, உங்கள் குழந்தைகளிடம் நோய்க்கான அறிகுறிகள் தென்படுகின்றனவாவென்று பார்த்த வண்ணம் இருப்பதன் வழி அவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். அன்புகூர்ந்து, கீழ்க்காண்பவற்றை அனுசரியுங்கள்:

- உங்கள் குழந்தைக்கு உடல் நலமில்லை எனில், அல்லது நோய்வாய்ப் படலாம் என நீங்கள் அஞ்சினால், குழந்தையை வீட்டிலேயே வைத்திருங்கள்.
- கூட்டம் கூடும் இடங்களுக்கு உங்கள் குழந்தையைக் கொண்டு செல்லாதீர்கள்.
- இந்த அறிகுறிகளுள் ஏதேனும் உங்கள் குழந்தையிடம் காணப்பட்டால் உடனே மருத்துவரிடம் கொண்டு செல்லுங்கள் -- 2-3 நாட்களாகக் காய்ச்சல், தொண்டைப் புண், மூக்கு ஒழுகுதல், வாய்ப் புண், கைகளில், கால்களில், கால் இடுக்குப் பகுதிகளில் சொறி போன்ற தோற்றம் (பெரும்பாலும் சிறிய கொப்பளங்கள் போல்), வாந்தி, பேதி, சோர்வு மற்றும் பலமின்மை.
- உங்கள் குழந்தை நடந்துகொள்ளும் விதத்தில் ஏதேனும் மாற்றம் தென்படுகிறதா என்பதைக் கூர்ந்து கவனியுங்கள். எதையும் குடிப்பதற்கு மறுத்தல், தொடர்ந்தாற்போல் வாந்தி எடுத்தல், மயக்கமடைவது போன்ற நிலை ஆகியவை தோன்றினால், உங்கள் குழந்தையை உடனடியாக கண்டங் கெர்பாவ் மருத்துவ மனை அல்லது தேசிய பல்கலைக் கழக மருத்துவமனையின் விபத்து-அவசரப் பிரிவுக்குக் கொண்டு செல்லுங்கள்.

4. நோய்த் தடுப்பு முறைகளைக் கடைப்பிடிப்பதில் நாம் ஒவ்வொருவரும் நம் பங்கைச் செய்தால்தான் குழந்தை கவனிப்பு விடுதிகளில் நோய்கள் தோன்றுவதையும் பரவுவதையும் நம்மால் தடுத்து நிறுத்த முடியும். பொது கவனிப்பு இடத்தில் கை, கால், வாய் நோய்த் தடுப்பு நிர்வகிப்புக்கு நீங்கள் அளிக்கும் ஒத்துழைப்புக்கு நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

5. கை, கால், வாய் நோய் பற்றி மேல் விவரம் பெற, சுகாதார அமைச்சின் இந்த இணையப் பக்கத்திற்குச் செல்லுங்கள்:

http;//www.moh.gov.sg/corp/about/newsroom/pressreleases/details.
do?id=36470805

லீ கிம் ஹுவா,
இயக்குநர்,
குடும்பச் சேவைகள் பிரிவு,
சமூக வளர்ச்சி, இளையோர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு.